# (23) அரசியல் விஞ்ஞானம்

## வினாத்தாள்களின் கட்டமைப்பு

**வினாத்தாள் I** - **நேரம் : 02 மணித்தியாலங்கள்**
இவ்வினாத்தாள் **A, B** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும்.
**எல்லா** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
பகுதி **A** - **5** கூற்றுக்களை உள்ளடக்கிய **30** பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும். ஒரு வினாவுக்கு **02** புள்ளிகள் வீதம் **30** வினாக்களுக்கும் **60** புள்ளிகள்

பகுதி **B** - குறு விடைகளை வழங்க வேண்டிய **20** வினாக்களைக் கொண்டதாகும். ஒரு வினாவுக்கு **02** புள்ளிகள் வீதம் **20** வினாக்களுக்கும் **40** புள்ளிகள்

வினாத்தாள் **I** இற்கான மொத்தப் புள்ளிகள் **100** ஆகும்.

**வினாத்தாள் II** - **நேரம் : 03 மணித்தியாலங்கள்** (மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்)
இவ்வினாத்தாள் 3 பகுதிகளைக் கொண்டதாகும். இப்பகுதிகளிலிருந்து **ஐந்து** வினாக்களுக்கு வியைளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு **20** புள்ளிகள் வீதம் மொத்தப்புள்ளிகள் **100**.
பகுதி **I** - கட்டுரை, அரைக் கட்டமைப்பு முறையிலான **மூன்று** வினாக்களைக் கொண்டதாகும். குறைந்தபட்சம் **ஒரு** வினாவுக்கேனும் விடையளித்தல் வேண்டும்.
பகுதி **II** - கட்டுரை, அரைக் கட்டமைப்பு முறையிலான **நான்கு** வினாக்களைக் கொண்டதாகும். குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களுக்கேனும் விடையளித்தல் வேண்டும்.
பகுதி **III**- கட்டுரை, அரைக் கட்டமைப்பு முறையிலான **மூன்று** வினாக்களைக் கொண்டதாகும். குறைந்தபட்சம் **ஒரு** வினாவுக்கேனும் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் **II** இற்கான மொத்தப்புள்ளிகள் **100** ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இறுதிப் புள்ளியைக் கணித்தல் : | வினாத்தாள் I | = | 100 | | |
| | வினாத்தாள் II | = | 100 | | |
| | இறுதிப் புள்ளி | = | 200 ÷ 2 | = | 100 |

## வினாத்தாள் I

**அறிவுறுத்தல்கள் :**
* இவ்வினாத்தாள் **A, B** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டிருப்பதுடன் பகுதி **A** ஆனது **30** பல்தேர்வு வினாக்களையும் பகுதி **B** ஆனது **20** குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
* சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
* ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

---

### பகுதி A

- **1 தொடக்கம் 20 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

**1.** அரசியல் என்பது,

(1) தேர்தல் செயன்முறையோடு வரையறுக்கப்பட்ட பயன்பாடாகும்.
(2) அரசாங்கப் பரப்போடு மட்டும் வரையறுக்கப்பட்ட அதிகாரப் போராட்டமாகும்.
(3) சமூக விஞ்ஞானங்களோடு அண்மைக் காலத்தில் இணைந்த எண்ணக்கருவொன்றாகும்.
(4) அரசு மற்றும் சமூகத்துக்கிடையில் நிலவும் அதிகாரத் தொடர்பாகும்.
(5) பொதுத்துறை நிர்வாகத்தோடு வரையறுக்கப்பட்ட செயன்முறையாகும். (...............)

**2.** அரசியல் கருத்தியல்களின் பணியாவது,

(1) மக்களின் நலன்களிலிருந்து விடுபட்டுச் செயற்படுவதற்கு அரசாங்கத்துக்கு வாய்ப்பளிப்பதாகும்.
(2) தேர்தல் செயன்முறையிலிருந்து சுயாதீனமாக நிற்பதற்குப் பொதுமக்களைத் தூண்டுவதாகும்.
(3) குறிப்பிட்ட ஓர் அரசியல் கருத்தையும் இலக்கையும் சூழ மக்களை ஒன்று திரட்டுவதாகும்.
(4) பிரசைகளுக்குப் பகுத்தறிவை வழங்குவதாகும்.
(5) மதங்களை வளர்ப்பதாகும்.

(...............)

**3.** அரசு என்பது,

(1) அரசாங்கம் என்பதற்கு இணையானதொரு பதமாகும்.
(2) பிரசைகள் இல்லாத சமூக நிறுவனம் ஒன்றாகும்.
(3) நீண்ட வரலாறு இல்லாத சமூகத் தோற்றப்பாடு ஒன்றாகும்.
(4) பூகோளமயமாக்கத்தினால் பலம் பெற்றுள்ள அரசியல் தாபனமொன்றாகும்.
(5) சமூகத்திலுள்ள அரசியல் அதிகாரத் தாபனங்களின் ஐக்கியமாகும்.

(...............)

**4.** அரசாங்கம் என்பது,

(1) அரசுக்கு வெளிவாரியாக நிலவும் அரசியல் தாபனமாகும்.
(2) சமூகத்தில் நிலவும் உயர்தன்மை பொருந்திய அரசியல் நிறுவனமாகும்.
(3) சனநாயக ரீதியாக குறிப்பிட்ட காலமொன்றுக்குத் தெரிவுசெய்யப்படுவதாகும்.
(4) நிறைவேற்றுத் துறையொன்று இன்றி நிலவக்கூடிய நிறுவனமாகும்.
(5) தொடர்ச்சியான இருப்பினைக் கொண்ட அதிகாரக் கட்டமைவாகும்.

(...............)

**5.** மாக்சியவாதத்துக்கேற்ப,

(1) அரசானது வர்க்க ஆதிக்கத்தின் கருவியாகும்.
(2) தாராளவாதமானது சமூக முன்னேற்றத்துக்கு ஊன்றுகோலாக அமையும் தத்துவமாகும்.
(3) முதலாளித்துவப் பொருளாதார முறைமையே சிறந்த பொருளாதார முறைமையாகும்.
(4) வர்க்க வேறுபாடு சமூகத்தின் பொது நன்மைக்கு அவசியமானதாகும்.
(5) பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான தீர்வு நலன்புரி அரசாகும்.

(...............)

**6.** அரசியல் விஞ்ஞானத்துக்கான ஓர் அணுகுமுறை என்ற வகையில் பெண்ணிலைவாதம் முக்கியத்துவம் பெறுவது,

(1) அரசு பற்றி அதற்கேயுரிய கோட்பாடொன்று இன்மையினாலாகும்.
(2) அதில் பல்வேறு சிந்தனாவாதக் குழுவினர் இருப்பதனாலாகும்.
(3) பால்நிலை சமத்துவத்துக்காகப் போராடுவதை வலியுறுத்தவதனாலாகும்.
(4) அரசியல் பற்றி அடிப்படையான வினாக்களை எழுப்பி 'அரசியல்' என்ற எண்ணக்கருவை பரவலாக்கியமையினாலாகும்.
(5) அதற்கு நீண்டதொரு வரலாறு இருப்பதனாலாகும்.

(...............)

**7.** மோதல் நிலைமாற்றத்தின் மூலம்,

(1) மோதலொன்றின் ஒரு தரப்பு வெற்றி தவிர்க்கப்படுகின்றது.
(2) மோதலின் பரவல் கட்டுப்படுத்தப்படுகின்றது.
(3) மோதல் நீடிப்பு தவிர்க்கப்படுகின்றது.
(4) மோதல் தீர்வுக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது.
(5) மோதலின் இயங்குதன்மையும் நோக்கங்களும் நலன்களும் மாற்றத்துக்குட்படுத்தப்படுகின்றன.

(...............)

**8.** பேச்சுவார்த்தை என்ற எண்ணக்கருவுக்குப் **பொருந்தாத** கூற்று யாது?

(1) மோதலை அதிகரிக்கச் செய்யும் ஒரு பொறிமுறையாகும்.
(2) மோதலை முகாமைப்படுத்துவதற்கும் தீர்ப்பதற்குமான ஊடகமாகும்.
(3) மோதலுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஊன்றுகோலாக அமையும் ஊடகச் செயன்முறையாகும்.
(4) மோதலோடு தொடர்பான தரப்பினர்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதற்கான ஆதாரமொன்றாகும்.
(5) தரப்பினர்களுக்கிடையில் நிலவும் கலந்துரையாடல் செயன்முறையொன்றாகும்.

(...............)

**9.** ஒற்றையாட்சி அரசாங்க முறையின் விசேட பண்பாவது,

(1) மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள் என்ற இரு வகையான அரசாங்கக் கட்டமைவுகளைக் கொண்டிருத்தலாகும்.
(2) இறைமை அதிகாரமானது தனியான தேசிய நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருத்தலாகும்.
(3) வளர்ச்சியுற்ற உள்ளூராட்சி முறையொன்றைக் கொண்டிருத்தலாகும்.
(4) சுயாதீனமான நீதி முறையொன்று நிலவுதலாகும்.
(5) தனிமன்றச் சட்டத்துறை நிலவுதலாகும். (...............)

**10.** நாடொன்றில் அடக்குமுறை ஆட்சி தோன்றுவதற்கு ஊன்றுகோலாக அமையும் மூலக்கொள்கையாவது,

(1) பெரும்பான்மையினரின் அபிப்பிராயம் மட்டுமே சரியானது என ஏற்றுக்கொள்ளுதலாகும்.
(2) வலு வேறாக்கமாகும்.
(3) யாப்புறுவாதமாகும்.
(4) பிரதிநிதித்துவ ஜனநாயகமாகும்.
(5) சட்டத்தின் ஆட்சியாகும்.

(...............)

**11.** அரசாங்கமானது தனது அதிகாரங்களை முறையற்றவாறு பிரயோகிப்பதைத் தடுப்பதற்கு மொன்டெஸ்கியு முன்வைத்த எண்ணக்கருவுக்குப் பொருந்துவது,

(1) அதிகாரத் தடைகள் சமன்பாடாகும்.
(2) நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தலாகும்.
(3) மனித உரிமைகளைப் பாதுகாத்தலாகும்.
(4) பலம் பொருந்திய சிவில் சமூகமொன்று நிலவுவதாகும்.
(5) நீதிப் புனராய்வு அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதாகும்.

(...............)

**12.** அரசியல் யாப்பு என்பது "அரசாங்கத்தின் அதிகாரங்கள், ஆளப்படுவோரின் உரிமைகள், ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான தொடர்புகள் என்பவற்றைத் தீர்மானிக்கும் மூலக்கொள்கைகள் முறைமை ஆகும்." இந்த பொருள் விளக்கத்தை முன்வைத்தவர்,

(1) சேர். ஐவர் ஜெனிங்ஸ் ஆவார்.
(2) C. F. ஸ்ட்ரோங் ஆவார்.
(3) K. C. வெயார் ஆவார்.
(4) மொன்டெஸ்கியு ஆவார்.
(5) A. V. டைசி ஆவார்.

(...............)

**13.** பழம் வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க மாதிரியின் பண்பு **அல்லாதது,**

(1) அரசாங்கக் கட்டமைவில் பாராளுமன்றுக்குக் கேந்திர இடம் கிடைக்கப்பெறுதலாகும்.
(2) நிறைவேற்றுத்துறை பாராளுமன்றுக்குப் பொறுப்புக்கூறுதலாகும்.
(3) சட்டங்கள் பற்றிய புனராய்வு அதிகாரம் நீதித்துறைக்குரியதாக இருத்தலாகும்.
(4) இரு கட்சி முறைமை நிலவுதலாகும்.
(5) சட்டத்துறை இருமன்ற முறையினதாக இருத்தலாகும்.

(...............)

**14.** காலனித்துவ அரசு பற்றிய எண்ணக்கருவுக்குப் **பொருந்தாத** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) காலனித்துவ அரசுக்கும் காலனித்துவத்துக்கும் இடையிலான தொடர்பை விளக்குவதற்குப் பயன்படுத்தும் அரசியல் விஞ்ஞான எண்ணக்கரு ஒன்றாகும்.
(2) காலனித்துவ அரசின் பிரதிநிதித்துவப் பணிகளை நிறைவேற்றுகின்றது.
(3) தாராளவாத ஜனநாயகப் பண்புகளைக் கொண்டதாகும்.
(4) காலனித்துவ ஆட்சிக்குக் குறைந்தபட்ச நெறிமுறைத் தன்மையே மக்களிடமிருந்து கிடைக்கின்றது.
(5) காலனித்துவ அரசின் பொருளாதாரச் சுபீட்சத்துக்குப் பங்காற்றுகின்றது.

(...............)

**15.** கோல்புருக் சீர்திருத்த யோசனையொன்று **அல்லாதது,**

(1) வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாதொழித்தமையாகும்.
(2) இராஜகாரிய முறைமையைத் தொடர்ச்சியாகப் பேணியமையாகும்.
(3) அரசாங்க சேவையில் நுழைவதற்கு இலங்கையர்களுக்கு வாய்ப்பளித்தமையாகும்.
(4) நிலவிய இரட்டையாட்சி முறைமையை இல்லாதொழித்தமையாகும்.
(5) தேசாதிபதியின் தன்னிகரற்ற அதிகாரத்தைக் குறைத்தமையாகும்.

(...............)

**16.** அமெரிக்க அரசியல் யாப்பு சுருக்கமானதாகும். அதன் மூலம் அரசாங்க முறைமையின் புறவமைப்பே காட்டப்படுகின்றது. அது போஷிக்கப்பட்டிருப்பது,

(1) உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளினாலாகும்.
(2) ஜனாதிபதியின் கட்டளைகளினாலாகும்.
(3) செனேட் சபை நிறைவேற்றிய சட்டங்களினாலாகும்.
(4) சர்வதேச உடன்படிக்கைகளினாலாகும்.
(5) பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், பிரயோகங்கள் என்பவற்றினாலாகும்.

(...............)

**17.** பின்வரும் கூற்றுகளில் தற்கால பிரித்தானிய அரசாங்க முறையை விவரிப்பதற்குப் பொருத்தமான கூற்று யாது?

(1) அது சமஷ்டி ஆட்சி அரசாங்க முறையினதாக மாறியுள்ளது.
(2) அது கூட்டாண்மை அரசாங்க முறையினதாக மாறிக்கொண்டிருக்கின்றது.
(3) அது ஒற்றையாட்சி, சமஷ்டி ஆட்சி என்ற எந்தவொரு மாதிரிக்கும் உட்படுவதில்லை.
(4) அது மத்தியமயமாகிய ஒற்றையாட்சி முறையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது.
(5) அது அரை - குறைச் சமஷ்டி முறையினதாக மாறிக்கொண்டிருக்கின்றது.

(...............)

**18.** சோல்பரி அரசாங்க முறையின் பண்பொன்று **அல்லாதது,**

(1) அரசியல் யாப்பு எழுதப்பட்டிருந்தமையாகும்.
(2) சார்பு ரீதியாக நெகிழும் அரசியல் யாப்பொன்றினைக் கொண்டிருந்தமையாகும்.
(3) சட்டத்துறை தனிமன்ற முறையினதாக இருந்தமையாகும்.
(4) இலங்கைச் சமூகத்தைப் பல இன, பல மத ரீதியானது என ஏற்றுக்கொண்டமையாகும்.
(5) சுயாதீனமான நீதிசேவையையும் அரசாங்க சேவையையும் தோற்றுவித்தமையாகும்.

(...............)

**19.** 1978 ஆம் ஆண்டின் யாப்பின் மீதான 19 ஆம் திருத்தத்தின் பிரதான நோக்கம்,

(1) பதினெட்டாம் யாப்புத் திருத்தத்தை முழுமையாக இல்லாதொழிப்பதாகும்.
(2) இலங்கை அரசாங்க முறையை அதிகளவு ஜனநாயகமயமாக்கத்துக்கு உட்படுத்துவதாகும்.
(3) அரசியலமைப்புப் பேரவையைத் தாபிப்பதாகும்.
(4) ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்களுக்கு வரையறுப்பதாகும்.
(5) பிரதம மந்திரியின் அதிகாரத்தை அதிகரிப்பதாகும்.

(...............)

**20.** இலங்கையின் அரசியல் கட்சி முறையை அறிமுகப்படுத்தக் கூடியதாயிருப்பது,

(1) பல கட்சி முறை என்றாகும்.
(2) இரு கூட்டுக் கட்சி முறை என்றாகும்.
(3) இரண்டு கட்சிகள் ஆதிக்கம் பெறுவதைத் தடுக்கும் கட்சி முறை என்றாகும்.
(4) மந்திரிசபை அரசாங்க முறையின் அறிமுகத்தோடு தோன்றிய கட்சி முறை என்றாகும்.
(5) பிரதான இரண்டு கட்சிகள் ஆதிக்கம் பெறும் பல கட்சி முறை என்றாகும்.

(...............)

- **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியான கூற்றினை அல்லது கூற்றுகளின் தொகுதியைக் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.**

**21.** அரச கொள்கைகள்,

A - அரசாங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் தோல்வியுற்றமையின் காரணமாக ஒரு பாடமாகக் கற்கப்படுதல் ஆரம்பமாகியது.
B - வகுக்கப்படுதல் அரசியல்வாதிகளின் பணியாக இருப்பதோடு நடைமுறைப்படுத்தப்படுதல் நிர்வாகிகளின் பணியாகும்.
C - நடைமுறைப்படுத்தப்படும் போது அரசியல்வாதிகளினதும் பொதுமக்களினதும் பாதிப்புக்களிலிருந்து சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
D - அரசாங்கங்கள் மாறும் போது மாற்றமுற முடியும்.
E - நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் கடமைப்படுகின்றன.

(1) A B C (2) A B D (3) B C D (4) A B C D (5) B C D E

(...............)

**22.** சர்வதேச அரசியலில் அரச சார்பு செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கும் அமைப்புகளாவன,

A - ஐக்கிய நாடுகள் தாபனம்
B - நேட்டோ நிறுவனம்
C - சர்வதேச மன்னிப்புச் சபை
D - ஐரோப்பிய ஒன்றியம்
E - சர்வதேச செங்சிலுவைக் குழு

(1) A மற்றும் B (2) A மற்றும் D (3) B மற்றும் C (4) B மற்றும் E (5) A, B மற்றும் D

(...............)

**23.** 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு அரசியல் யாப்பு,

A - சிறுபான்மைக் குழுக்களுக்கான பாதுகாப்பை போதியளவு வழங்கத் தவறியது.
B - அடிப்படை உரிமைகளை வலுப்படுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்கவில்லை.
C - சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளை அரசகரும மொழிகளாக ஆக்கியது.
D - அரசாங்க சேவையை அரசியல் தலைமைத்துவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தது.
E - அரசியல் யாப்பு நீதிமன்றம் ஒன்றை அறிமுகம் செய்தது.

(1) A மற்றும் B (2) B மற்றும் C (3) C மற்றும் D
(4) A, B மற்றும் E (5) A, C, D மற்றும் E

(...............)

**24.** வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கும்போது இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளாவன,

A - நிலப்பரப்பில் சிறிய அரசாக இருத்தல்.
B - பொருளாதார மற்றும் தேசிய அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல்.
C - பிராந்திய வல்லரசொன்று முன்னிலையிலிருத்தல்.
D - வல்லரசுகளுக்கிடையிலான ஆயுதப் போட்டியை முகாமைப்படுத்துதல்.
E - பொது நலனைக் கொண்ட தேசிய கருத்தியல் ஒன்று காணப்படாமை.

(1) A மற்றும் B (2) B மற்றும் C (3) C மற்றும் D
(4) A, B, C மற்றும் E (5) B, C, D மற்றும் E

(...............)

**25.** இலங்கையில் ஜனநாயக அரசாங்க முறையின் இருப்புக்கு,

A - இருபதாம் நூற்றாண்டின் முதலரைப் பகுதியிலிருந்து பலமான ஜனநாயக சம்பிரதாயம் ஒன்று நிலவியமை காரணமாகியுள்ளது.
B - 1931 இலிருந்து அனுபவிக்கும் சர்வஜன வாக்குரிமை தடையாக உள்ளது.
C - மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சி முறை பங்காற்றியுள்ளது.
D - யாப்புறு ஆட்சியில் பொதுமக்கள் நம்பிக்கை வைத்தமை காரணமாகியுள்ளது.
E - ஜனநாயகமல்லாத மாற்று முறைகளில் பொது மக்களின் விருப்பமின்மை காரணமாகியது.

(1) A மட்டும் (2) A மற்றும் B (3) C மட்டும் (4) A மற்றும் D (5) E மட்டும்

(...............)

- **26 தொடக்கம் 30 வரையிலான ஒவ்வொரு வினா தொடர்பாகவும் இரு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை 1 இற்கான வழிகாட்டியிலுள்ள 1, 2, 3, 4, 5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதைத் தெரிவுசெய்து அதனிலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

அட்டவணை 1 இற்கான வழிகாட்டி

| இலக்கம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் விபரிக்கிறது. |

அட்டவணை I

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| **26.** | பத்தொன்பதாம் யாப்புத் திருத்தத்தின் கீழ் பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் முதலாவதாகக் கூடி 4 ½ வருடங்கள் பூர்த்தியாகும் வரை ஜனாதிபதி அதனைக் கலைக்க முடியாது. | பிரதமரின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதியால் பாராளுமன்றைக் கலைக்க முடியும். (...............) |
| **27.** | சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கிருந்த நேரடி அதிகாரம் பதினெட்டாம் யாப்புத் திருத்தத்தின் மூலம் அகற்றப்பட்டது. | பதினெட்டாம் யாப்புத் திருத்தமானது விகிதசமப் பிரதிநிதித்துவ முறையில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியது. (...............) |
| **28.** | மாகாண சபைகள் முறைமையானது 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் நேரடிப் பெறுபேறாகும். | 13 ஆம் யாப்புத் திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட மாகாணசபைகள் தீவின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கியது. (...............) |
| **29.** | இலங்கையிலுள்ள விகிதசமப் பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் எந்தவொரு தனி அரசியல் கட்சியாலும் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாகும். | வாக்காளர்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்பு விகிதசமப் பிரதிநிதித்துவ முறையினால் பலப்படுத்தப்பட்டுள்ளது. (...............) |
| **30.** | இலங்கையின் அரசியல் கட்சி முறைமையில் பிரதான இரு கட்சிகள் ஆதிக்கம் மிக்கனவாகும். | இலங்கையின் அரசியல் கட்சி முறைமை பல சிறிய கட்சிகளைக் கொண்ட இரு கட்சி ஆதிக்க முறையினதாகும். (...............) |

## பகுதி B

**31.** கல்விசார் முறையில் அரசியல் என்ற எண்ணக்கருவுக்கு **இரண்டு** பிரதான பொருள்கள் உண்டு. அவற்றைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**32.** 'அரசியல் கோட்பாடு' என்ற எண்ணக்கருவுக்கு இரண்டு பொருள்கள் உண்டு. **அவ்விரு** பொருள்களையும் குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**33.** பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசாங்க முறைகளை முறையே குறிப்பிடுக.

(i) பரம்பரை முறையில் அரசத்துவத்துக்கு உரிமை கோரும் தனிநபர் ஆட்சி

..........................................................................

(ii) பொதுமக்களின் பிரதிநிதிகளின் மூலம் கொண்டு நடத்தப்படும் ஆட்சி

..........................................................................

**34.** பின்வரும் பண்புகள் பொருந்துகின்ற அரசியல் கருத்தியல்கள் **இரண்டையும்** முறையே குறிப்பிடுக.

(i) அரச வழிபாடு ..........................................................................

(ii) அரசு பற்றிய வர்க்கமுறை விளக்கம் ..........................................................................

**35.** அரசின் தோற்றம் பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை முன்வைத்த ரூசோவின் முதற்கோளின் மூலம் முன்வைக்கப்படும் மூலக்கொள்கைகள் **இரண்டும்** யாவை?

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**36.** அரைகுறை ஜனாதிபதி முறை சில பண்புகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**37.** இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்களில் நிர்ணயமான முறையில் பாதிப்புச் செலுத்திய அரசியல் சீர்திருத்தங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**38.** 'தேசிய வாதம்' என்ற அரசியல் கருத்தியலானது **இரு** பிரதான இயல்புகளின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது. அவை யாவை?

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**39.** இந்திய மதச்சார்பின்மை வாதத்தின் **இரு** பொருள்களையும் குறிப்பிடுக.

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**40.** மோதல்களின் செயற்பாடுகளுக்கு அமைவாக, அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்க முடியும். **அவ்விரு** வகைகளும் யாவை?

(i) ..........................................................................

(ii) ..........................................................................

**41.** சோல்பரி அரசாங்க முறையின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையானது மேல் மற்றும் கீழ் என்ற இரு மன்றங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள்

(i) மேல் மன்றம் என அழைக்கப்பட்டது எது? ..........................................................................................

(ii) கீழ் மன்றம் என அழைக்கப்பட்டது எது? ..........................................................................................

**42.** (i) 1972 அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது?

..........................................................................................................................................................

(ii) அதன் பதவிக்காலம் யாது? ..........................................................................................................

**43.** நவீன ஜனநாயக அரசாங்க முறைகளில் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதில் இரண்டு தேர்தல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. **அவ்விரண்டையும்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

**44.** ஓர் அரசின் இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தின் படி அரசாங்க முறைகள் இரண்டு வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன. **அவ்விரு** வகைகளையும் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

**45.** பொதுக் கொள்கைகளின் உருவாக்கம் மற்றும் நடைமுறை பற்றிய கொள்கை வட்டமானது ஏழு கட்டங்களைக் கொண்டதாகும். அதன் முதல் **இரண்டு** கட்டங்களையும் முறையே குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

**46.** பதினெட்டாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ்,

(i) அரசாங்கத்தின் உயர் பதவிக்கு ஆட்களை நியமிப்பதற்காக ஜனாதிபதிக்கு அவதானிப்புகளை வழங்குவதற்குத் தாபிக்கப்பட்டிருந்த பேரவையின் உத்தியோகபூர்வப் பெயர் யாது? ...................................................................

(ii) அப்பேரவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது? ...................................................................

**47.** பதின்மூன்றாம் அரசியல் யாப்புத் திருத்தத்தின் மூலம் அதிகாரங்கள் மூன்று அதிகார நிரல்களின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

**48.** இலங்கையின் அரசியல் கட்சி முறை தலைமைத்துவ ஆதிக்கக் கட்சிகள் இரண்டைக் கொண்ட இரு கூட்டுக்கட்சி முறை என்றழைக்கப்படுகின்றது. அந்த தலைமைத்துவ ஆதிக்கக் கட்சிகள் **இரண்டையும்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

**49.** தற்கால அரசுகள் வெளிநாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பயன்படுத்தும் **இரண்டு** உபாயங்களைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

**50.** சார்க் அமைப்பின் தலைமையின் கீழ் செயற்படும் இலங்கை தொடர்புபட்டுள்ள **இரண்டு** வர்த்தக உடன்படிக்கைகளையும் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................................................................

(ii) ..........................................................................................................................................................

* * *

## (23) அரசியல் விஞ்ஞானம்

### வினாத்தாள் II

**அறிவுறுத்தல்கள் :**

* இவ் வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

* பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

**1.** "அரசியல் என்பது பிரசைகளது சமூக வாழ்வின் ஓர் அங்கமாகும்". ஆராய்க.

**2.** அரசியல் விஞ்ஞானத்துக்கான பின்வரும் அணுகுமுறைகளில் எவையேனும் **இரண்டினை** விபரிக்குக.

(i) தத்துவார்த்த அணுகுமுறை
(ii) ஒப்பீட்டு அணுகுமுறை
(iii) பெண்ணிலைவாத அணுகுமுறை

**3.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.

(i) நவீன ஆள்புல அரசு
(ii) நவ தாராளவாத அரசின் பண்புகள்
(iii) சமதர்ம அரசு
(iv) பூகோளமயமாக்கம் அரசுகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம்

### பகுதி II

**4.** இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினைச்** சுருக்கமாக விளக்குக.

(i) காலனித்துவ இரட்டைப் பொருளாதாரம்
(ii) சர்வஜன வாக்குரிமையின் அறிமுகத்தினால் ஏற்பட்ட சமூக, அரசியல் விளைவுகள்
(iii) நவீன அரசுக்கான தளமிடப்படல்

**5.** சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றினதும் 1972 முதலாம் குடியரசு அரசியல் யாப்பின் கீழமைந்த தேசிய அரசுப் பேரவையினதும் சட்டவாக்க அதிகாரங்களை ஒப்பிடுக.

**6.** 1978 யாப்பின் மீதான 18 மற்றும் 19 ஆம் திருத்தங்களின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒப்பிடுக.

**7.** 1978 அரசியல் யாப்பின் கீழ் பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க.

(i) மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான தொடர்பு
(ii) விகிதசமப் பிரதிநிதித்துவ முறைக்கு எதிரான விமர்சனங்கள்
(iii) பிரதம மந்திரிப் பதவி
(iv) நீதித்துறையின் சுதந்திரம்

### பகுதி III

**8.** பெரிய பிரித்தானியாவின் **அல்லது** இலங்கையின் அரசாங்க முறை ஒற்றையாட்சி அரசாங்க மாதிரியிலிருந்து மாற்றமுற்றுள்ள விதத்தை விபரிக்குக.

**9.** "மோதல் தீர்வு என்பது நீண்டதொரு செயன்முறையாகும்." விபரிக்குக.

**10.** பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் அண்மைக்காலப் போக்குகள்
(ii) அரசியல் கட்சிகளுக்கும் அமுக்கக் குழுக்களுக்குமிடையிலான வேறுபாடுகள்
(iii) சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரம்
(iv) உலக அரசியலில் அரசு சார்பற்ற செயற்பாட்டாளர்கள்

* * *